**சார்பு நீதிமன்றம், இலால்குடி.**

நாள்:31.01.2023 செவ்வாய்கிழமை
OS.No. 266/2018DW1: பரமசிவம்
C/w 37/2020

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தையல் தொழில் செய்கிறேன். பாலசுப்பிரமணியன் எந்த தேதி மாதம் வருடம் அசல் ஆவணங்களை பட்டா பாஸ்புத்தகத்தை எடுத்து சென்றார் என்று என்னால் சொல்ல இயலாது. அது சம்மந்தமாக அவர் மீது நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எனது அப்பா இருந்தவரை வாதி பாலசுப்பிரமணியத்திற்கும் அப்பாவுக்கும் முரண்பாடு எதுவும் இருந்தது இல்லை. எனது அம்மா இருந்தவரை வாதி பாலசுப்பிரமணியத்திற்கும் அம்மாவுக்கும் முரண்பாடு எதுவும் இருந்தது இல்லை என்றால் சரிதான். ஆனால் அம்மா இறப்பிற்கு அவர் வரவில்லை. அம்மா இறப்பிற்கு வரவில்லை என்ற விசயத்தை எதிர்வழக்குரையில் சொல்லாததற்கு காரணம் எதுவும் இல்லை. அம்மா இறப்பில் அவர் கலந்து கொண்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, 7 ஆவணங்களை பார்ப்பதற்கு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 02.07.2000 ஆவணப்படிக்கு தாவா சொத்தை பொறுத்து குத்தகை பத்திரம் ஏற்பட்ட போது நான் அங்கு இல்லை. வழக்கிற்கு பிறகு அதில் சாட்சி கையெழுத்து போட்டிருக்கும் மகேந்திரன், ஜெயராமன், ராஜ்மோகன் ஆகியோர் பற்றி நான் விசாரிக்கவில்லை. வா.சா.ஆ.7 ஆவணத்தின் அடிப்படையில் அசல் ஆவணங்களை எனது அப்பா சங்கிலிமுத்து வாதியிடம் ஒப்படைத்தார் என்றால் தெரியாது. அந்த குத்தகை பத்திரம் அடிப்படையில் வாதி இன்று வரை வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இருக்கிறார் என்றால் தெரியாது. குடும்ப உறவினர் என்பதால் அவ்வப்போது பணம் வாங்கி கொண்டு எனது அம்மா வாதிக்கு ஒத்திக்கு விட்டிருந்தார். 25.06.2012 அன்று வா.சா.ஆ.1 படி எனது அம்மாவுடன் வாதி ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்ட விபரம் எனக்கு தெரியாது. அந்த ஒப்பந்தத்தில் சாட்சி

கையெழுத்திட்ட நபர்களை நான் விசாரிக்கவில்லை. வா.சா.ஆ.1 ஒப்பந்த காலத்தில் அம்மா மட்டும் தான் பணம் வாங்கினார் என்றால் சரிதான். அந்த தேதியில் தங்கராஜ், நடராஜன், நான் ஆகியோர் சேர்ந்து கொண்டு கூடுதலாக பணம் கேட்கவில்லை. வாதி பாலசுப்பிரமணியம் இடத்தை கிரயத்திற்கு எழுதி கேட்டதால் தான் பிரச்சினை வந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அடிப்படையில் கிரயம் எழுதி தரவேண்டும் என்று கேட்ட போது நாங்கள் சுவாதீனத்தை பறிக்க முயற்சித்ததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. நாங்கள் சொல்வது போல் வாதி அனுமதியின் பெயரிலான சுவாதீனத்தில் இருக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி சுவாதீனத்தை மீட்க உத்தரவிட கோரி உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 38/2014 தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான்.அ ந்த வழக்கு 17.10.2019 அன்று தவறுகைக்காக தள்ளுபடியாக விட்டுவிட்டோம் என்றால் சரிதான். எங்கள் வழக்கில் உண்மை இல்லை என்பதால் தான் அதை நடத்த முயற்சிக்கவில்லை என்றால் சரிதான்.வழக்கை கோப்பிற்கு எடுக்க மனு தாக்கல் செய்திருக்கிறேன். அதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயும் வாதியின் தாயாரும் சகோதரிகள் என்றால் சரிதான். எனது அப்பா 20.01.2012ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான் அதன் பிறகு எனது அம்மா வாதியுடன் எவ்வளவு தொகைக்கு சொத்தை கிரயம் பேசினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அப்பாவின் 30 நாள் சடங்கு முடிந்து வா.சா.ஆ.1 ஏற்பட்டது என்றால் சரியல்ல. வாதி 20 வருடமாக குத்தகைக்கு இருக்கிறார் என்றால் சரிதான்.

உணவு இடைவேளைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது

வா.சா.ஆ.7 பத்திரப்படி எனது அப்பா வாதியிடமிருந்து 2 லட்ச ரூபாய் வாங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல. அந்த குத்தகை பணத்திற்கு ஈடாக இன்றுவரை தாவா சொத்தில் வாதி சுவாதீனத்தில் இருக்கிறார் என்றால் சரியல்ல.

25.06.2012 அன்று கொடுத்த 2 லட்சத்தை நேர் செய்து மீதி 1 லட்சத்தி 35 ஆயிரத்தை எனது தாயாரிடம் கொடுத்து மொத்த விற்பனை தொகை 4,30,000 என நிர்ணயம் செய்து வா.சா.ஆ.1 ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல மீத தொகையான 95,000 ரூபாயுடன் வாதி பலமுறை அணுகியும் நாங்கள் யாரும் ஒத்துழைக்கவில்லை என்றால் சரியல்ல. 25.06.2012 கிரய ஒப்பந்தம் மாரியாயி, மற்றும் தங்கராஜ் ஆகியோரால் எழுத்து மூலமாகவும், மாரியாயியின் மற்ற வாரிசுகளால் வாய்மொழியாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் கூடுதல் தொகை கேட்டதால் பிரச்சினை வந்தது என்றால் சரியல்ல. நாங்கள் வாதியின் சித்தியின் வாரிசுகள் என்பதால் வாய்மொழி கிரய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது தாயார் வாதிக்கு தான் கிரயம் செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. 28.07.2013 அன்று எனது அம்மா இறந்தார் என்றால் சரிதான். அதன்பின்னிட்டு 30 நாள் காரியம் அன்று வாதி மீதி தொகையுடன் எங்களை அணுகினார் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 37/2020 தாக்கல் செய்வதற்கு முன்பு நான் தான் வாதி மீது போலிசில் புகார் கொடுத்தேன். அங்கு நான் செல்வதற்கு முன்பே நீதிமன்றத்தில் பார்த்து கொள்வதாக வாதி எழுதி கொடுத்து விட்டு சென்றுவிட்டார். வாதியை சட்ட விரோதமாக சொத்திலிருந்து காலி செய்ய போலிஸ் மூலம் மிரட்டினோம் என்றால் சரியல்ல. அதனால் வாதி 37/2020 வழக்கை தாக்கல் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது என்றால் சரியல்ல. 07.08.2013 அன்று வழங்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல. அதில் நானும் தங்கராசும் அந்த அறிவிப்பிற்கு எந்த விபரமும் சொல்லவில்லை என்றால் தெரியாது. வாதி ஒப்பந்தத்தை நிறைவேற்ற எப்போதும் தயாராக இருக்கிறார் என்றால் சரியல்ல. நிறைய முறை பத்திரம் எழுதி கொள்ள கேட்டார் என்றால் சரியல்ல. 03.02.2016 அன்று அறிவிப்பு அனுப்பி பத்திரம் எழுதி கேட்ட விபரம் தெரியுமா என்றால் இரண்டு மூன்று வழக்கு இருப்பதால் அது குறித்து சரியாக தெரியவில்லை. அந்த அறிவிப்பிற்கு 13.02.2016 அன்று பதில் தெரிவித்து இருக்கிறோம் என்றால்

சரிதால். அந்த அறிவிப்பு மூலமாக தான் கிரய பத்திரம் எழுதி கொடுக்க மறுப்பு தெரிவித்தோம் என்றால் சரியல்ல. மறுப்பிலிருந்து உரிய காலத்திற்குள் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதால் காலாவதி தோஷத்தால் அசல் வழக்கு 266/2018 பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்திருக்கும் இருவழக்குகளும் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

/Signed/
பரமசிவம்

/Signed /
A.B.நசீர் அலி, B.A.,B.L.,
சார்பு நீதிபதி(FAC)
இலால்குடி